அம்பத்தூர்மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.234/2012 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R. இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 16.12.2024

பெயர் பினேஸ் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

பிரதிவாதி 2,3 தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

1. இவ்வழக்கு தாக்கல் செய்தபோது வில்லங்க சான்று வாங்கினேன் அதை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வில்லங்கம் பார்த்தேன். அதில் எனது கிரையத்திற்கு முன்பே ஒரு கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இவ்வழக்கில் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வில்லங்கம் இருப்பதை மறைப்பதற்காக அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியும் . 3ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரைய ஆவணம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் இவ்வழக்கு தாக்கல்

செய்வற்கு முன்பே இவ்வழக்கின் 2,3 பிரதிவாதிகள் ஒரு வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கின் பிராதை இவ்வழக்கின் வா.சா.ஆ.1 ஆக நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

3. எனது தந்தை பவர் எழுதி கொடுத்து அதன் மூலம் மாக ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்ட்டு பதிவு செய்யப்பட்டிருந்த போது அதன் பின்னர் என் தந்தை எனக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதிகொடுத்தது தவறு என்று சொன்னால் எனக்கு தெரியாது. 2,3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் உரையில் அவர்கள் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிரை ஒப்பந்தத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் இவ்வழக்கை எனது தந்தை எழுதி கொடுத்த செட்டில் மென்ட ஆவணத்தின் அடிப்படையில் தான் தாக்கல் செய்துள்ளேன்.

4. பவர் மற்றும் ஒப்பந்தம நிலுவையில் இருக்கும் போது அதனை ரத்து செய்யாமல் எனது தந்தை எனக்கு எழுதி கொடுத்த செட்டில் மென்ட் ஆவணம செல்லாது என்று சொன்னால் சரியல்ல, அந்த பவர் பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் எனது தந்தை ஒரு பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே வேறு ஒரு நபருக்கு எழுதிகொடுத்த சொத்தை அபகரிக்கும் என்ற நோக்கதில் நானும் எனது தந்தையும் கூட்டாக சேர்ந்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம், பொய்யான தகவல்களை கூறியுள்ளோம் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.